1982 பிப்ரவரி 4]

முதுகுளத்தூர் தொகுதியில் நிறைவேற்றப்பெற்றுவரும் நூறு குழாய் திட்டப்பணிகள்.

*வினா எண். 33—திரு. கே. தனுக்கோடித்தேவர் : மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்குவிடையளிப்பாரா—

(அ) நூறு குழாய்த் திட்டம் முதுகுளத்தூர் தொகுதியில் துவங்க அரசு பரிசீலனை செய்யுமா ?

(ஆ) ஆம் எனில் எப்பொழுது ?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : (அ) மற்றும் (ஆ) தலைவர் அவர்களே, வறட்சிக்குட்பட்ட பகுதிகள் திட்டத்தின்கீழ் இராமநாதபுரம் மாவட்டத்தில் நூறு குழாய்த் திட்டம் ஒன்று நிறைவேற்றப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின் கீழ் முதுகுளத்தூர் தொகுதியும் அடங்கும். இத்தொகுதியைப் பொறுத்தவரை கமுதி வட்டத்தைச் சேர்ந்த புனவாசல் வல்லக்குளம்—2, அச்சங்குளம், காடனேரி, அலங்கார் பட்டணம், வல்லக்குளம்—3, வேப்பங்குறிச்சி, பெரியானைக்குளம் ஆகிய இடங்களில் அமைக்கப்பட்டுள்ளன.

திரு. எஸ். ஆண்டித்தேவர் : பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சரவர்கள் வறட்சிப்பகுதியாகிய முதுகுளத்தூர் தொகுதியும் இந்தத் திட்டத்தில் அடங்கும் என்று சொன்னார்கள். கிழக்கு இராமநாதபுரம் பகுதி ஆண்டு தோறும் இந்த தண்ணீர் இல்லை என்கிற நிலைமைகள் இருக்கின்றன. ஆகவே வைகை ஆற்றிலிருந்து தண்ணீர் எடுத்து வந்து கடலாடி வரையில் உள்ள வறட்சிப் பகுதிகளுக்கு தண்ணீர் கொடுக்க அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : தலைவர் அவர்களே, இது வேளாண்மைப் பொறியியல் துறை மூலமாகப் பாசனத்திற்காக அமைக்கப்படும் குழாய்த் திட்டம். மாண்புமிகு உறுப்பினர் கேட்க விரும்புகின்ற குழாய்த் திட்டம் பற்றி மாண்புமிகு தொழிலாளர் நல அமைச்சரிடத்தில் பேசிக் கேட்க வேண்டும்.

திரு. செ. சிவசாமி : பேரவைத் தலைவர் அவர்களே, இந்தத் திட்டத்தில்,தற்போது கிட்டத்தட்ட 50 குழாய்கள் வரை அமைக்கப்பட்டு வேலைகள் நடந்து கொண்டு இருக்கின்றன. இந்தத் திட்டம் எவ்வளவு சீக்கிரத்தில் முடிவு அடையும் என்று சொல்ல முடியுமா என்று அறியவிரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : தலைவர் அவர்களே, 1982 ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 31 ஆம் நாளுக்குள் முடியும்.

[1982 பிப்ரவரி 4

திரு. க. பாரமலை : பேரவைத் தலைவர் அவர்களே, இந்தத் திட்டம் நல்ல முறையில், பயன்உள்ள வகையில் செயல் பட்டு வருகிறது. இந்தத் திட்டத்தை இன்னும் அதிக அளவில அமல்படுத்துவதற்கு, 100 குழாய்கள் எனபதோடு நிறுத்தி விடாமல், எந்த அளவிற்குத் தேவை இருக்கிறதோ அந்த அளவிற்கு அத்தகைய தேவைக்கேற்ற அளவிற்கு விஸ்தரிக்கும் உத்தேசம் அரசுக்கு உண்டா ?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : தலைவர் அவர்களே, நிதி வசதியைப் பொறுத்து விஸ்தரிப்பு மேற்கொள்ளப்படும்.

கொடைக்கானல் 'டம்டம்' பாறை அருகே ஏற்படும் சாலை விபத்துக்களைத் தடுக்க மேற்கொண்ட நடவடிக்கைகள்.

*வினா எண். 34— **திரு. கா. கோபாலகிருஷ்ணன் :** மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கொடைக்கானல் மலைப்பாதையில் 'டம்டம்' பாறை என்னுமிடத்தில் அடிக்கடி சாலை விபததுக்கள் நடைபெறுகிறதா?

(ஆ) அதனைத் தடுக்க தடுப்பு நடவடிக்கைகள் எடுக்கப் பட்டுள்ளனவா ?

(இ) இதற்கு மாற்றுப்பாதையாக பூலத்தூர் - தும்மலப்பட்டி சாலை வேலை ஆரம்பிக்கப்படுமா ?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : (அ) ஆம்.

(ஆ) கி. மீ. 10/2–12/2 வரையுள்ள சாலையை அகலப் படுத்தும் பணி ஆண்டு 'பராமரிப்பு' நிதியிலிருந்து மேற்கொள்ளப படும்.

(இ) இச் சாலையை மாற்றுப் பாதையாக அமைக்க செயற் குறிப்பு ஒன்றும் தற்சமயம் அரசின் பரிசீலனையில் இல்லை.

திரு. ராஜ்குமார் விஜய ரெகுநாத தொண்டமான் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கொம்பக்கரையில் இருந்து கொடைக்கானல் வரையில் புதிய தார் பாதை அமைக்க அரசு ஏற்பாடு செய்ய இருப்பதாகக் கேள்விப்பட்டோம். அது எந்த நிலையில் இருக்கிறது என்று அறிய விரும்புகிறேன்.